# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 25

## தமிழ் ஆய்வு நெறிமுறைகள் - முதுகலை பட்டயம்

### நேரடி ஒப்படைப்பு (SPOT ASSIGNMENT)

| பாடம்<br>COURSE<br>ஆய்வு நெறிமுறைகள் | பாடக்குறியீட்டு எண்<br>COURSE CODE<br>PGDTR – 01 | சேர்க்கை ஆண்டு<br>ADMISSION YEAR<br>AY 2009 - 10 |
|---|---|---|

**நேரம் : ஒரு மணி** **மொத்த மதிப்பெண்கள்: 25**

எவையேனும் **ஒன்றினை** மட்டும் **இருபது பக்க** அளவில் விளக்கி எழுதுக.

1. ஆய்வுத் திட்டம்
2. ஆய்வேடு உருவாக்கம்
3. ஆய்வேடு உருவாக்கத்தில் மேற்கோள், அடிக்குறிப்புகளின் இன்றியமையாமை.
4. ஆய்வேடு உருவாக்கத்தில் துணைநூற்பட்டியல், பின்னிணைப்புகளின் இடம்.


# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 25

## தமிழ் ஆய்வு நெறிமுறைகள் - முதுகலை பட்டயம்

### நேரடி ஒப்படைப்பு (SPOT ASSIGNMENT)


| பாடம்<br>COURSE<br>தமிழ் ஆராய்ச்சியின் வரலாறும், வளர்ச்சியும் | பாடக்குறியீட்டு எண்<br>COURSE CODE<br>PGDTR – 02 | சேர்க்கை ஆண்டு<br>ADMISSION YEAR<br>AY 2009 - 10 |
|---|---|---|

**நேரம் : ஒரு மணி** **மொத்த மதிப்பெண்கள்: 25**

எவையேனும் **ஒன்றினை** மட்டும் **இருபது பக்க** அளவில் விளக்கி எழுதுக.

1. தமிழ் ஆராய்ச்சியின் முன்னோடிகள்
2. பழந்தமிழ் ஆய்வுகள்
3. இக்கால இலக்கிய ஆய்வுகள்
4. தமிழ் ஆய்வின் போக்குகள்.

**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 25**

**தமிழ் ஆய்வு நெறிமுறைகள் - முதுகலை பட்டயம்**

**நேரடி ஒப்படைப்பு (SPOT ASSIGNMENT)**

| பாடம்<br>COURSE | பாடக்குறியீட்டு எண்<br>COURSE CODE | சேர்க்கை ஆண்டு<br>ADMISSION YEAR |
|---|---|---|
| திறனாய்வு அணுகுமுறைகள் | PGDTR – 03 | AY 2009 - 10 |

**நேரம் : ஒரு மணி** **மொத்த மதிப்பெண்கள்: 25**

எவையேனும் **ஒன்றினை** மட்டும் **இருபது பக்க** அளவில் விளக்கி எழுதுக.

1. ஆய்வாளனும் திறனாய்வும்
2. இக்கால இலக்கித் திறனாய்வு முறைகள்
3. இலக்கிய வளர்ச்சியில் திறனாய்வின் இடம்
4. ஒரு சிறந்த தமிழ் இலக்கியப் படைப்பைத் திறனாய்வு செய்க.

## தமிழ் ஆய்வு நெறிமுறைகள்: முதுகலைப் பட்டயப் படிப்பு
## திட்ட ஆய்வேடு அளித்தல்

**மாணவர்களுக்கான பொதுத் தகவல்கள்:**

**தலைப்புத் தேர்ந்தெடுத்தல்:**

ஒவ்வொரு மாணவரும் அவரவர் விரும்பும் தலைப்புகளில் திட்ட ஆய்வேட்டை உருவாக்கிப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்க வேண்டும். ஆய்வுப் பொருள் கீழ்க்காணும் தமிழியல் புலங்களில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்ததாக அமைய வேண்டும்.

| | |
|---|---|
| இலக்கியம்: | சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், புராண இலக்கியம், கீர்த்தணைகள், இக்கால இலக்கியம், நிகண்டு, அகராதி முதிலியன. |
| இலக்கணம்: | தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை தமிழில் உருவாகியுள்ள இலக்கணம் தொடர்பானவை. |
| மொழியியல்: | தமிழ் மொழி பற்றிய ஆய்வுகள், மொழியியல் ஒப்பாய்வுகள். |
| பண்பாடு: | தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் நாட்டார் வழக்காறுகள், இசை, சிற்பம், ஓவியம், கட்டடக் கலை, மருத்துவம், வானியல், சோதிடம் முதலியன. |
| ஒப்பாய்வியல்: | இலக்கிய, இலக்கண ஒப்பாய்வுகள், மொழி ஒப்பாய்வுகள், தமிழ் - பிறதுறை ஒப்பாய்வுகள். |
| பிறதுறைகள்: | அறிவியல் தமிழ், இதழியல், கணித்தமிழ், சட்டத் தமிழ், மார்க்சியம், தலித்தியம், பெண்ணியம், எதிர்காலவியல் முதலியன. |

**திட்ட ஆய்வேட்டைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்தல்:**

1. திட்ட ஆய்வேடு A4 தாளில் ஒரு பக்கத்தில் அச்சிடப்பட வேண்டும். பின்னிணைப்புகள் நீங்களாக அறுபது (60) பக்கங்களுக்குக் குறையாமல் ஆய்வேடு அமையவேண்டும்.

2. திட்ட ஆய்வேட்டில், ஆய்வேடு ஆய்வாளரால் சொந்தமாக உருவாக்கப் பட்டதற்கான உறுதிமொழிக் கடிதம் ஆய்வாளரின் கையொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

3. திட்ட ஆய்வேட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் 12 புள்ளி அளவு எழுத்தில் இருபது (20) வரிகளுக்குக் குறையாமல் இடம் பெற்றிருக்க வேண்டும்.

4. திட்ட ஆய்வேட்டின் மேல் மற்றும் கீழ்ப்பகுதியில் 1.5 சென்டிமீட்டர் இடைவெளியும், வெளிப்பகுதி மற்றும் உள்பகுதியில் இடது வலது ஓரங்களில் 2 சென்டிமீட்டர் இடை வெளியும் இருத்தல் வேண்டும்.

5. திட்ட ஆய்வேடு உயர்தரம் உடைய தாளில் (Excutive Bond Paper) உருவாக்கப்பட்டு நன்கு கட்டமைப்புச் செய்யப்பட வேண்டும். (சுருள் கட்டமைப்புக்கு அனுமதி இல்லை).

6. திட்ட ஆய்வேட்டின் மேலட்டையின் மேல் பகுதியில் ஆய்வேட்டின் தலைப்பும், அதற்குரிய படிப்பின் பெயர் / நோக்கமும், நடுப்பகுதியில் ஆய்வாளர் பெயரும் இடம் பெறவேண்டும். திட்ட ஆய்வேட்டின் அடிப்பகுதியில்

பல்கலைக்கழகத்தின் முத்திரை, பெயர், மாதம், ஆண்டு ஆகியவை இடம் பெறவேண்டும்.

7. திட்ட ஆய்வேட்டின் ஒரு (1) நகலைப் பல்கலைக் கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் தேர்வுப்பிரிவில் அளிக்க வேண்டும்.

8. படிப்புக் காலத்திற்குள் திட்ட ஆய்வேட்டை அளிக்க வேண்டும்.

9. குறித்த காலத்திற்குள் திட்ட ஆய்வேட்டை அளிக்க வேண்டும். இல்லையெனில் ஓர் ஆண்டுக்கு ரூ.100-ம், ஓராண்டுக்கு மேல் ரூ.200-ம் அபராதம் விதிக்கப்படும். மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டால் மீண்டும் புதிதாகப் பதிவு செய்யவேண்டும். ஏற்கனவே எழுத்துத் தேர்வு முடிந்திருந்தால் அது கணக்கில் கொள்ளப்படும்.